# Basic Sanskrit

## Book – 1 (प्रथमः पाठः)

**ॐ सरस्वति नमस्तुभ्यं वरदे कामरूपिणि ।**

**विद्यारम्भं करिष्यामि सिद्धिर्भवतु मे सदा**

சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி

வித்யாரம்பம் கரிஷ்யாமி சித்திர்பவது மே சதா

வரத்தை அளிப்பவளே! அழகு வடிவினளே! சரஸ்வதி தேவியே உனக்கு நமஸ்காரம் நான் கல்வி பயில ஆரம்பிக்கிறேன். உன் அருளால் எப்பொழுதும் எனக்கு வெற்றி கிடைக்கட்டும்.

## अमृतवचनम्

**"आरम्भ उत्तमजनाः न परित्यजन्ति"**

(Aarambha uttamajanaaha na parityajanti)

- **आरम्भ**: (Aarambha): आरम्भ किया गया कार्य।
- **उत्तमजनाः**: (Uttamajanaaha): श्रेष्ठ या महान लोग।
- **न**: (Na): नहीं।
- **परित्यजन्ति**: (Parityajanti): छोड़ते हैं।

**Meaning** – Good people do not abandon what they have begun.

**அர்த்தம்** – மேன்மக்கள், அவர்களால் தொடங்கப்பட்டதை, எந்த சூழ்நிலையிலும் விட்டுவிட மாட்டார்கள்.

**சமஸ்கிருத வர்ணமாலா**

எந்த மொழியின் அடிப்படை அதன் எழுத்துக்கள்.

முதன்மை எழுத்துக்களில், ஸ்வர: (स्वरः) எனப்படும் 13 உயிரெழுத்துக்களும், வியஞ்சன் (व्यंजन) எனப்படும் 33 மெய் எழுத்துக்களும் உள்ளன.

| स्वर अक्षराणि (Vowels) | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| अ | आ | इ | ई | उ | ऊ | ऋ | ॠ | ऌ | ए | ऐ | ओ | औ |
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | ரு | ரூ | லு | ஏ | ஐ | ஓ | ஔ |
| a | A | i | I | u | U | ru | Ru | lu | aE | ai | O | o |

உயிரெழுத்துக்கள் பின்வரும் வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

**ह्रस्वम्** (குறில்): (ஹ்ரஸ்வ (ह्रस्व) எழுத்துக்கள்)

1. ஒரு மாத்திரை கொண்ட குறுகிய உயிரெழுத்துக்கள். மாத்திரை என்பது ஒரு கண் சிமிட்டலின் நேர அலகு.

**अ, इ, उ, ऋ, लृ**

**दीर्घम्** (நெடில்): (தீர்க்க (दीर्घ) எழுத்துக்கள்)

2\.

இரண்டு மாத்திரைகளைக் கொண்ட உயிரெழுத்துக்கள்

**आ, ई, ऊ, ॠ, ए, ऐ, ओ, औ**

3. **मिश्र स्वराः** மிஸ்ர ஸ்வரா: (கலப்பு உயிரெழுத்துக்கள்):

இரண்டு உயிர் எழுத்துக்கள் இணைந்த ஒலி.

**ए (अ + इ), ऐ (आ +ई), ओ (अ +उ), औ (आ + ऊ)**

4. **प्लुत–स्वराः** (ப்லுத ஸ்வரா:) – நீண்ட நெடிலெழுத்துக்கள்

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாத்திரைகளைக் கொண்ட நீண்ட உயிரெழுத்துக்கள்.

அவைகள், எண்ணிக்கையில் ஒன்பது. உயிரெழுத்தின் நீட்டிப்பு என்பது உயிரெழுத்துக்களுக்கு மட்டுமே பொருந்தும்.

**अ३, इ३, उ३, ऋ३, ऌ३, ए३, ऐ४, ओ३, औ४**

5. **अनुस्वार:** (அநுஸ்வார:)

இது ஓர் எழுத்தின் மேலே வைக்கும் புள்ளி. (ம்) என உச்சரிக்க வேண்டும். அநுஸ்வாரம் எல்லா உயிர் எழுத்துகளுடன் வரும். தனித்து வராது.

**अं, आं, इं, ईं, उं, ऊं, ऋं, ॠं, एं, ऐं, ओं औं**

6. **विसर्ग:** (விஸர்க:)

இது ஓர் எழுத்தின் பக்கத்தில் மேலும் கீழுமாக வைக்கப்படும் புள்ளிகள். எல்லா உயிர் எழுத்துகளுடன் வரும் தனித்து வராது. ஆனால், முன்னுள்ள உயிரெழுத்து வரும்போது அதன் உச்சரிப்பு பாதிதான் வரும்.

अः (அஹ), आः (ஆஹ), इः (இஹி), ईः (ஈஹி), उः (உஹு), ऊः (ஊஹு), ऋः (ருஹு), ॠः (ரூஹு), एः (ஏஹே), ऐः (ஐஹி), ओः (ஓஹோ), औः (ஔஹு)